இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 176 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – தை 23 – வெள்ளிக்கிழமை 06 பிப்ரவரி 2026 – திருச்சி ★★ 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 176 : Thiruvalluvar Year - 2057 - Thai 23 - Friday 06 February 2026 - Trichy ★★ 16 Pages ₹ 5.00


## நாட்டின் பாதுகாப்பு விவகாரத்தில் கடமை தவறிய பிரதமர் மோடி!

### ராகுல்காந்தி குற்றச்சாட்டு!

புதுடெல்லி, பிப். 6-

நாட்டின் பாதுகாப்பு விவகாரத்தில் பிரதமர் நரேந்திர மோடி தமது கடமையை செய்ய தவறிவிட்டார் என மக்களவை எதிர்க்கட்சித்தலைவர் ராகுல் காந்தி மீண்டும் குற்றஞ்சாட்டியுள்ளார்.



டெல்லியில் செய்தியாளர்களிடம் பேசிய ராகுல்காந்தி, முன்னாள் ராணுவ தளபதி நரவானே எழுதிய புத்தகம் உண்டு என்றும் அதனை அனைவரும் படிக்க வேண்டும் என்றும் கூறினார். புத்தகமே இல்லை என நாடாளுமன்றத்தில் ஒன்றிய அமைச்சர் ராஜ்நாத் சிங் கூறியதாகவும் ஆனால் இதுதான் அந்த புத்தகம் என்றும் குறிப்பிட்ட ராகுல்காந்தி, மக்களவைக்கு வர உள்ள பிரதமர் மோடியிடம் நேரடியாக நரவானே புத்தகத்தை அளிக்க உள்ளதாக தெரிவித்தார். முன்னாள் ராணுவ தளபதி நரவானே எழுதிய புத்தகத்தை வாசித்து காட்டிய ராகுல்காந்தி, கடந்த 2020ம் ஆண்டு சீன ராணுவ டாங்கிகள் இந்திய எல்லைக்குள் ஊடுருவியதாகவும், அப்போது பிரதமர் மோடி, ராணுவ தளபதியை வழி நடத்தாமல் தமது கடமையில் இருந்து தவறிவிட்டதாகவும் குற்றஞ்சாட்டினார்.

மேலும் ராகுல்காந்தி கூறுகையில்,

நாட்டின் பாதுகாப்பு விவகாரத்தில் கடமை தவறிய பிரதமர் மோடி சீன ராணுவ டாங்கிகள் இந்திய எல்லைக்குள் நுழைந்த உடன் என்ன செய்ய வேண்டும் என தொலைபேசி மூலம் ராணுவ தளபதி கேட்டுள்ளார். அதற்கு ராஜ்நாத் சிங் உங்களுக்கு என்ன தோன்றுகிறதோ அதனை செய்யுங்கள் என பிரதமர் மோடி கூறியதாக தெரிவித்துள்ளார். நாட்டின் பாதுகாப்பு விவகாரத்தில் பிரதமர் மோடி தமது கடமையை செய்யத்தவறி விட்டார்தாம் தனித்து விடப்பட்டதை போல் உணர்ந்ததாக நரவானே இந்த புத்தகத்தில் எழுதியுள்ளார்.

பிரதமர் மோடி மக்களவைக்கு வர மாட்டார் என்றே கருதுகிறேன். பிரதமர் மோடி அவைக்கு வந்தால் நரவானே எழுதிய புத்தகத்தை நேரடியாக வழங்குவேன் என்றும் அவர் கூறினார்.

## எஸ்.ஐ.ஆருக்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் மேற்கு வங்க முதல்வர் வழக்கு!

கொல்கத்தா, பிப். 6-

மேற்கு வங்கத்தில் எஸ்.ஐ.ஆர். நடவடிக்கையின்கீழ் வரைவு வாக்காளர் பட்டியலில் 58 லட்சம் வாக்காளர்களின் பெயர்கள் நீக்கப்பட்டன. மேலும் 1.25 கோடி வாக்காளர்கள் முரண்பாடான தகவல்களை வழங்கியதாக வகைப்படுத்தப்பட்டு அவர்களிடம் உரிய அடையாள ஆவணங்களை இந்திய தேர்தல் ஆணையம் கோரியுள்ளது.

இந்த நிலையில், எஸ்.ஐ.ஆருக்கு எதிராக ஆளும் திரிணாமூல் காங்கிரஸ் உள்பட பல்வேறு தரப்பினர் தாக்கல் செய்த மனுக்களை உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி சூர்ய காந்த் மற்றும் நீதிபதிகள் ஜயமால்ய பாக்சி, விபுல் எம்.பஞ்சோலி ஆகியோர் அடங்கிய அமர்வு நேற்று முன்தினம் விசாரித்தது.

சட்டப் படிப்பை (எல்.எல்.பி.) நிறைவு செய்துள்ள மம்தா பானர்ஜியே தனது தரப்பு வாதங்களை நீதிபதிகள் முன்னிலையில் நேற்று முன்தினம் முன் வைத்தார்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (4.2.2026) விழுப்புரம் மாவட்டம், திண்டிவனத்தில் நடைபெற்ற விழாவில், தமிழ்நாடு முழுவதும் உள்ள இளைஞர்களின் கனவுகளை பதிவு செய்ய, 'என் கனவு – என் எதிர்காலம்' என்ற இணையதளத்தினை தொடங்கி வைத்தார். இவ்விழாவில், அமைச்சர்கள் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், சி.வி.கணேசன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் து.ரவிக்குமார், தரணிவேந்தன், முன்னாள் அமைச்சர்கள் முனைவர் க.பொன்முடி, கே.எஸ்.மஸ்தான், சட்டமன்ற உறுப்பினர்கள் இலட்சுமணன், அன்னியூர் சிவா, மணிகண்ணன், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் பொன். கௌதம சிகாமணி, மாவட்ட ஆட்சித் தலைவர் ஷே.ஷேக் அப்துல் ரஹ்மான் உள்பட உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

### தமிழ்நாட்டின் வளர்ச்சியை ஒன்றிய பா.ஜ.க. அரசும் அதன் கூட்டாளிகளும் கெடுக்கிறார்கள்! ஆனால் நாம்

# மக்களின் கனவுகளை நிறைவேற்றி நம்பிக்கையைப் பெற்றுள்ளோம்!

## திண்டிவனத்தில் 'என் கனவு – என் எதிர்காலம்' திட்டத்தைத் தொடங்கி வைத்து முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை !

**திண்டிவனம், பிப்.6-**

**திண்டிவனத்தில் நடைபெற்ற அரசு விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றும்போது, "தமிழ்நாட்டின் வளர்ச்சியை ஒன்றிய பா.ஜ.க. அரசும் அதன் கூட்டாளிகளும் கெடுக்கிறார்கள். ஆனால் நாம் மக்களின் கனவுகளை நிறைவேற்றி அவர்தம் நம்பிக்கையைப் பெற்றுள்ளோம்" என்று கூறினார்.**

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (4.02.2026) விழுப்புரம் மாவட்டம், திண்டிவனத்தில் நடைபெற்ற "உங்களுடன் ஸ்டாலின்" திட்டத்தின் 10 ஆயிரம் முகாம்கள் நிறைவு மற்றும் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் ஆற்றிய உரை வருமாறு:-

"உங்களுடன் ஸ்டாலின்" திட்டத்தின் 10 ஆயிரம் முகாம்கள் நிறைவு மற்றும் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கக் கூடிய இந்த இனிய விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கக் கூடிய உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்.

ஒரு காலத்தில், திந்திரிவனம் என்று அழைக்கப்பட்டதுதான் இன்றைய திண்டிவனம். திந்திரி என்றால் புளி. புளியமரங்கள் அதிகம் இருந்த பகுதி என்ற காரணத்தால், அதைக் காரணப் பெயராக வந்தது. சோழர்கள் காலத்திலும், பல்லவர் காலத்திலும், நாயக்கமன்னர்கள் காலத்திலும், வர்த்தக நகராக இருந்த இந்த திண்டிவனம், செஞ்சி கோட்டை, மயிலம் முருகன் கோயில், மேல்மலையனூர் அங்காளம்மன் கோயில் என்று பல சிறப்புக்களைக் கொண்ட மாவட்டம் இந்த விழுப்புரம் மாவட்டம்.

தலைநகர் சென்னைக்குள் வருவதற்கு வாசலாக இருக்கக்கூடிய காரணமான திண்டிவனத்தில் இந்த மாபெரும் விழாவில் கலந்து கொள்வதில் நான் பெருமகிழ்ச்சியடைகிறேன்; பெருமை அடைகிறேன்.

### மக்களின் கனவுகளை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம்!

கடந்த சட்டமன்றத் தேர்தலின்போது, தொலைநோக்குப் பார்வையுடன் தேர்தல் அறிக்கையில் வழங்கிய வாக்குறுதிகளில் பெரும்பாலானவற்றை நிறைவேற்றியும், தேர்தல் வாக்குறுதிகளில் சொல்லப்படாத பல திட்டங்களை, முத்திரை திட்டங்களாக செய்து கொடுத்தும், தமிழ்நாட்டு மக்களின் கனவுகளை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம்!

திராவிட முன்னேற்றக் கழகத்தை பொறுத்தவரைக்கும், சட்டங்களையும், பெரிய, பெரிய திட்டங்களையும், நிறைவேற்றுவது மட்டுமல்ல. தமிழ்நாட்டு மக்கள் ஒவ்வொருவரின் தேவைகளையும் நிறைவேற்ற வேண்டும்! அதற்காகத்தான், 2021 சட்டமன்றத் தேர்தலுக்கு முன்பு, தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய 234 தொகுதிகளுக்கும் நான் வந்து, உங்களின் குரலைக் கேட்டு, கோரிக்கைகளை, மனுக்களாக வாங்கியிருக்கிறேன்.

இந்தப் பயணத்தில், கோரிக்கை மனுக்களை மட்டும் வாங்கவில்லை; தமிழ்நாட்டு மக்களின் நம்பிக்கையையும் பெற்று, திராவிட மாடல் அரசை அமைத்தோம். அந்த மனுக்களையெல்லாம் நூறு நாட்களுக்குள் தீர்த்து வைக்க வேண்டும் என்று முதலமைச்சராக பொறுப்பேற்ற முதல் நாளிலேயே "உங்கள் தொகுதியில் முதலமைச்சர்" என்ற ஒரு புது துறையை உருவாக்கினேன். இந்தத் துறை மூலமாக மக்களிடமிருந்து வாங்கிய 4 இலட்சத்து 57 ஆயிரத்து 645 மனுக்களுக்கு 100 நாட்களில் தீர்வு கண்டோம். அந்த நூறாவது நாளில் அதாவது, 2021 ஆகஸ்ட் 14-ஆம் நாள் தலைமைச் செயலகத்தில் சிறப்பு விழா நடத்தி, 32 ஆயிரத்து 283 பேருக்கு பட்டாவும், 30 ஆயிரத்து 455 நபர்களுக்கு சமூகப் பாதுகாப்புத் திட்ட ஓய்வூதியமும் வழங்கினேன்.

அதுமட்டுமல்ல, 19 ஆயிரத்து 664 வளர்ச்சித் திட்டப் பணிகளுக்கான ஒப்புதல் ஆணையையும், 9 ஆயிரத்து 444 வீடுகள் கட்டுவதற்கான நிதியுதவியையும், 544 கோடியே 27 இலட்சம் ரூபாய் செலவிலான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்கான ஆணைகளையும் வழங்கினேன்.

### 'முதல்வரின் முகவரி' மூலம் 1.49 கோடி மனுக்களுக்கு தீர்வு!

மக்களின் குறைகளை, தேவைகளை உன்னிப்பாக கவனித்து விரைவாக நம்முடைய திராவிட மாடல் அரசு நிறைவேற்றி வருகிறது. இது, மக்களிடம் நம்பிக்கையையும், எதிர்பார்ப்பையும் அதிகமாக்கியது. அதனால், அந்தத் திட்டத்தை விரிவாக்கி தொடர வேண்டும் என்று முடிவு செய்து, 2021 நவம்பரில், "முதலமைச்சரின் தனிப்பிரிவு" "முதலமைச்சரின் உதவி மையம்" மற்றும் "உங்கள் தொகுதியில் முதலமைச்சர்" ஆகிய மூன்று துறைகளையும் ஒருங்கிணைத்து 'முதல்வரின் முகவரி' என்ற ஒரு புதிய துறையை உருவாக்கினோம்.

நான் பெருமையுடன் சொல்கிறேன்; இந்தத் துறை மூலமாக 2021 மே மாதத்திலிருந்து இப்போது வரைக்கும் 1 கோடியே 49 இலட்சம் மனுக்களுக்கு தீர்வு கண்டிருக்கிறோம்.

என்னைப் பொறுத்தவரைக்கும்,



தொடர்ச்சி 3-ஆம் பக்கம்


## அமெரிக்க ஒப்பந்தம் குறித்து விவாதிக்க எதிர்க்கட்சிகள் கோரிக்கை!

### மக்களவை – மாநிலங்களவை அடுத்தடுத்து ஒத்திவைப்பு!

புதுடெல்லி, பிப். 6-

அமெரிக்கா உடனான வர்த்தக ஒப்பந்தம் குறித்து விவாதம் நடத்த வலியுறுத்தி எதிர்க்கட்சிகள் தொடர் முழக்கமிட்டதால் மக்களவை அடுத்தடுத்து 2 முறை ஒத்திவைக்கப்பட்டது.



மக்களவை நேற்று முன்தினம் கூடியதும், அமெரிக்கா உடனான வர்த்தக ஒப்பந்தம் குறித்து விவாதம் நடத்த வேண்டும் என காங்கிரஸ், தி.மு.க. உள்ளிட்ட எதிர்க்கட்சி எம்.பி.க்கள் வலியுறுத்தினர்.

இதனைத் தொடர்ந்து பேசிய மக்களவை கழகக் குழுத் தலைவர் டி.ஆர். பாலு, வர்த்தக ஒப்பந்தத்தை அமெரிக்கா தன்னிச்சையாக அறிவித்துள்ளதா? அல்லது இந்தியாவின் ஒப்புதலுடன் அமெரிக்கா அறிவித்துள்ளதா எனக் கேள்வி எழுப்பினார். அமெரிக்காவுடனான வர்த்தக ஒப்பந்தம் குறித்து வெளியாகி வரும் தகவல்கள் கவலை அளிப்பதாகவும் அவர் கூறினார்.

ஆனால், இக்கோரிக்கையை சபாநாயகர் ஏற்க மறுத்துவிட்டார்.

இதனைத் தொடர்ந்து எதிர்க்கட்சிகளின் எம்.பி.க்கள் தங்களது கோரிக்கையை வலியுறுத்தி முழக்கங்களை எழுப்பினர். இதனைத் தொடர்ந்து அவையை அடுத்தடுத்து ஒத்திவைப்பதாக சபாநாயகர் அறிவித்தார்.

இதனிடையே, எதிர்க்கட்சித் தலைவர் ராகுல்காந்தி பேச அனுமதி மறுக்கப்பட்டதைக் கண்டித்து மக்களவையில் முழக்கமிட்டதற்காக சஸ்பெண்ட் செய்யப்பட்ட 8 எம்.பி.க்கள் நாடாளுமன்ற வளாகத்தில் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மோடி சரணடைந்துவிட்டார் என்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளுடன், ஒன்றிய அரசுக்கு எதிராக முழக்கங்களை எழுப்பியவாறு அவர்கள் போராட்டம் நடத்தினர்.

இதேபோல் மாநிலங்களவையும் அடுத்தடுத்து ஒத்திவைக்கப்பட்டது.

## தமிழ்நாட்டில் 'டாடா கெமிக்கல்ஸ்' நிறுவனம் ரூ.1,300 கோடி முதலீடு!

### கடலூரில் சிலிக்கான் உற்பத்தி ஆலை! இராமநாதபுரத்தில் அயோடின் உற்பத்தி ஆலை!

இராமநாதபுரம், பிப். 6-

தமிழ்நாட்டில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான தி.மு.க. ஆட்சி அமைந்தது முதலே மாநிலத்தில் மாபெரும் தொழில் வளர்ச்சி ஏற்பட்டு வருகிறது.

மாநிலத்தில் தொழில் தொடங்குவதற்கு ஏற்ற உகந்த சூழலை ஏற்படுத்தியும், அடுத்தடுத்து முதலீட்டாளர் மாநாடுகளை நடத்தியும் தொழில்நிறுவனங்களை தமிழ்நாட்டை நோக்கி திராவிட மாடல் அரசு ஈர்த்து வருகிறது.

இதனால் பல்வேறு நிறுவனங்கள் தமிழ்நாட்டில் தொழில் தொடங்கவும், முதலீடு செய்யவும் பெரும் ஆர்வம் காட்டி வருகின்றன.

அந்தவகையில் தமிழ்நாட்டில் ஏற்கனவே பல்வேறு ஆலைகளை அமைத்துள்ள டாடா கெமிக்கல்ஸ் நிறுவனம், தற்போது மேலும் ஆயிரத்து 300 கோடி ரூபாய் அளவுக்கு முதலீடு செய்ய திட்டமிட்டு, அதற்கான நடவடிக்கைகளில் இறங்கியுள்ளது.

அதன்படி, முதற்கட்டமாக ராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள வாலிநோக்கம் பகுதியில் 515 கோடி ரூபாய் முதலீட்டில் சமையலுக்கு பயன்படும் அயோடின் உப்பு ஆலையை அமைக்கவிருக்கிறது. இதற்கான பணிகள் அடுத்த 36 மாதங்களில் நிறைவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த புதிய தொழிற்சாலை மூலம் 500க்கும் மேற்பட்டோருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கவுள்ளன.

இந்த ஆலை மூலம் ஆண்டுக்கு 2.10 லட்சம் டன் உப்பு உற்பத்தி செய்யப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. 2029 நிதியாண்டின் இரண்டாம் காலாண்டில் இந்த ஆலை செயல்பாட்டுக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதேபோல், கடலூரில் 775 கோடி முதலீட்டில் சிலிக்கான் உற்பத்தி ஆலையை டாடா கெமிக்கல்ஸ் நிறுவனம் நிறுவவுள்ளது.

இந்தத் திட்டம் 2028 நிதியாண்டில் தொடங்கப்படவுள்ளதாக அந்நிறுவனம் தெரிவித்துள்ளது. இரு ஆலைகளிலும் சேர்த்து மொத்தம் 1000க்கும் மேற்பட்டோருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கவுள்ளது.